DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 211/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு.பிரபாகரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th **March** 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி தெரிவிக்கும் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருச்சி சிறப்பு நுண்ணறிவு பிரிவு காவல்துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ம் ஆண்டு சங்கரன்கோவில் நகர காவல்நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது 01.10.2013 ம் தேதியன்று சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலைய ஆய்வாளராக பொறுப்பு வகித்தபோது ராஜேஸ்வரி என்பவர் 12.30 மணியளவில் சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை நிலையப்பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் சொர்ணவேல் என்பவர் பெற்று சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையக்குற்ற எண்.163/2013 ச/பி.457, 380 இதச ன் கீழவழக்கு பதிவுசெய்தார். மேற்படி வழக்கானது ஜிசிஆர் வழக்கு

என்பதால் உதவி ஆய்வாளர் சொர்ணவேல் எனது விசாரணைக்காக வழக்கு கோப்பை என் பார்வைக்கு வைத்தார். அந்த வழக்கு கோப்பை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 15.00 மணிக்கு சம்பவ இடதத்திற்கு சென்று சாட்சிகள் மருதநாயகம், பாண்டி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் ராஜேஸ்வரி, ராமசுப்பிரமணியம் என்ற விமல், ஜானகிதாஸ், புவனேஸ்வரி, மருதநாயகம், பாண்டி மற்றும் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த உதவி ஆய்வாளர் சொர்ணவேல் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். அதன்பின்பு சங்கரன்கோவில் தாலுகா காவல் ஆய்வாளர் நவீன் என்பவர் பணிக்கு திரும்பியதால் அவரின் பார்வைக்கு வழக்கு கோப்பை சமர்ப்பித்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**